
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
நினைவுப் பேருரை – 2024
(Emeritus Professor of Hindu Civilization)

## “சம்ஸ்கிருத தமிழ் நீதி இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்”

பேருரை வழங்குபவர்:

**திருமதி. சி. ஜெகநாதன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நிகழ்விடம்:
**கைலாசபதி கலையரங்கம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**28.08.2024.**

250

**பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்**

**நினைவுப் பேருரை – 2024**

(Emeritus Professor of Hindu Civilization)

LIBRARY UNIVERSITY

# "சம்ஸ்கிருத தமிழ் நீதி இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்"

பேருரை வழங்குபவர்:

**திருமதி. சி. ஜெகநாதன்,**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

சம்ஸ்கிருதத்துறை,


இந்துக்கற்கைகள் பீடம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

P14168

P14168

28.08.2024



பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

வாழ்நாட் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் வேத சிவாகமப் பாரம்பரியத்தையும், பல்கலைக்கழகம் சார்ந்த ஆய்வறிவியற் புலமைத்துவத்தையும் இணைத்த யுக சந்ததியாக திகழ்கிறார். யாழ்ப்பாணத்து நல்லூரில் சிவாச்சாரிய மரபுவழி வந்த இப் பெருந்தகை சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலான மொழிவளமும், இந்து நாகரிகம், இந்தியவியல் எனத் திரிசூல முனைகளாக இவரது ஆய்வுத்தடங்கள் நீட்சியும், கூர்மையும் பெற்றுத் திகழ்ந்தன. இவையாவற்றிற்கும் மேலாக அடக்கம், பணிவு என்பவற்றுடன் "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலாகிய" அறமும் கிரியைகளை மனமொன்றி ஆற்றும் திறனும் இவரிடம் அமையப் பெற்றிருந்தன.

சேர்.பொன்.இராமநாத வள்ளலின் சமய குருவாக விளங்கிய நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானத்தின் பரிபாலகர் சிவஸ்ரீ ந.வே.கார்த்திகேயக் குருக்கள் சுந்தரம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாகிய பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவன் என்பதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவருமாவார். இந்து நாகரிகத் துறையை புதிதாகப் ஆரம்பித்ததோடு இந்து நாகரிகத்துறையின் ஸ்தாபகத் தலைவராகவும் முதற் பேராசிரியராகவும் விளங்கி மனிதப்பண்பியற்பீடப் பீடாதிபதியாகவும் விளங்கித் தனது செயலுறுதியும், சாத்வீக பாவமும் குறையாது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த ஆளுமையாளராவார்.

வைதிக மரபில் அறிவு, பயிற்சி,அனுபவம் நிறைந்த பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்), சைவத்திருக்கோவிற் கிரியை நெறி முதலான காத்திரமான நூல்களின் ஆசிரியராவார். உலகளாவிய நிலையில் இந்து நாகரிகம் எனும் அறிவுப்புலத்தை கால்கொள்ளச்செய்த சிறப்பிற்குரிய வருமாவார்.

அறிவு, ஆளுமை, முதிர்வு என்பவற்றுடன் ஒன்றுபட்ட வெண்மையான பண்பாட்டுக் கோலம், உடை, விறுவிறுப்பு, நிமிர்ந்த நடை என எமது பல்கலைக்கழக சூழலை தமது பிரசன்னத்தால் உயிர்ப்பூட்டி உலாவந்து பாதம் பதித்த காலங்கள் இன்றும் எம்மால் உவகையுடன் நினைவுகூரப்படுகின்றது. சாத்வீக குணம் நிறைந்த பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்கள் முன்னேஸ்வரம் வடிவழகி அம்பாள் மீது கொண்ட அளவற்ற பக்தி, கிரியைகளுள் வசந்த நவராத்திரி காலத்து சண்டீஹோம, அபிஷேக ஆராதனை, மந்திர உச்சாடனம், ஸ்ரீசக்ர பூஜை முதலானவை பக்தர்களையும் பரவசமூட்டும் தன்மையன.

இப் பெருந்தகையின் சேவையினை நயந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாழ்நாட் பேராசிரியர், கௌரவ இலக்கிய கலாநிதி ஆகிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீட உருவாக்கமும் இதனைத்தாங்கும் விரிவுரையாளர் குழாமும் இப் பெருந்தகையினைக் குருமூலமாகக் கொண்ட விழுதுகளே என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருந்தகைக்குக் கௌரவமளிக்கும் வகையில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபையின் முன்னெடுப்பில் நிகழும் ஆறாதாவது நினைவுப் பேருரைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். இப் பெருந்தகையின் வித்துவச் சுவடுகளின் வழிவந்தவராகிய சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஸ்ரீகலா ஜெகநாதன் சம்ஸ்கிருத தமிழ் நீதியிலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள். எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுகின்றார். அவருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராசா,**
துணைவேந்தர்,
கணிதப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

துணை வேந்தர் அவர்களே!

பீடாதிபதிகளே, துறைத்தலைவர்களே , பேராசிரியர்களே, விரிவுரை யாளர்களே, மாணவர்களே, நண்பர்களே! அனைவருக்கும் வணக்கம்.

பேராசிரியர் இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் நினைவுப் பேருரையினை ஆற்றுவதற்கு கிடைத்த சந்தர்பத்துக்காக மகிழ்கின்றேன். நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ரகுவம்சத்தை தமிழில் மொழிபெயர்த்த அரசகேசரி, ஆறுமுகநாவலர், சுன்னாகம் குமாரசாமிப் புலவர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், காசிவாசி செந்திநாதையர், புலோலியூர் கணபதிப்பிள்ளை, சோ.நடராஜா போன்ற சம்ஸ்கிருத புலமைமிக்கவர்கள் வரிசையில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களும் ஈழத்தில் தோன்றிய தமிழறிஞர்களில் ஒருவராவர்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் தந்தையார் சிவஸ்ரீ. கார்த்திகேயக் குருக்களே இவருக்கு குருவாக இருந்து ஐந்தாவது வயதில் அட்சர ஆரம்பத்தையும், ஏழாவது வயதில் உபநயனத்தையும் செய்து வைத்தவர் என்பதை அறியமுடிகிறது. வைதீகக் கல்வியான வேத அத்யயனத்னை பிரம்மஸ்ரீ. க.சிதம்பரசாஸ்திரிகள் , கோப்பாய் ஸ்ரீநிவாசஸ சாஸ்திரிகள் ஆகியோரிடம பெற்றார். மரபு வழியாக வேதம் ஓதும் பயிற்சியையும், ஆகமக் கல்வியையும், தந்தையாரிடமிருந்து உரிய நியமங்களுடன் பெற்றார். 1936ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பிரம்மஸ்ரீ. சி.சீதாராம சாஸ்திரிகளிடம் பாணினிய வியாகரணம், சம்ஸ்கிருத காவியங்கள், நாடகங்கள், அலங்கார சாஸ்திரங்கள் முதலியவற்றை மரபு வழிக்கல்வி மூலம் பெற்ற பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் சம்ஸ்கிருத மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவராக விளங்கினார்.

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை தற்காலிக விரிவுரையாளராகவும், 1953 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத்

துறைக்கு நிரந்தர விரிவுரையாளராகவும் நியமனம் பெற்றவர். பல்வேறு அறிவியல் துறைகளில் - வேதங்கள், ஆகமங்கள், இலக்கணம், சோதிடம், கலைகள் முதலியவற்றில் விற்பன்னரான இவர் மூன்று தசாப்பங்களுக்கு மேலாக பெருந்தொகையான சிங்கள, தமிழ் மாணவர்களுக்கு சம்ஸ்கிருதம் கற்பித்து அவர்களது அபிமானத்தை நன்கு பெற்றவர்.

பரமேஸ்வராக் கல்லூரியினை அடிப்படையாகக் கொண்டு 1974 இல் யாழப்பாண வளாகம் நிறுவப்பட்ட போது மொழிகள் மற்றும் கலாசார கற்கை நெறித்துறையின் பதில் தலைவராக நியமனம் பெற்ற பேராசிரியர் 1975 இல் முதன் முறையாக உருவாக்கப்பட்ட இந்துநாகரிகத்துறையின் முதற் பேராசிரியர் ஆகவும் விளங்கினார். இக்காலப்பகுதியில் சம்ஸ்கிருதத்துறைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் செய்துள்ளார்.

சம்ஸ்கிருத மொழி வரலாறுபற்றிய மிகவும் குறைவான நூல்களே தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ் நாட்டவரான வையாபுரிப்பிள்ளையின் இலக்கிய உதயம், சோ.நடராஜாவின் வடமொழி இலக்கிய வரலாறு (செம்மொழிக்காலம்) போன்றன ஒரு சில நூல்களாகும். இந்நிலையில் பேராசிரியரின் வடமொழி இலக்கிய வரலாறு வேதவிலக்கியங்கள் தொடர்பான பல விடயங்களை மிகவும் எளிமையான முறையில் எடுத்துக் கூறுகின்றது. சம்ஸ்கிருத மொழி கல்லாதோரும் இதனை வாசிக்கும்படி மிக எளிய நடையில் அமைந்திருப்பது அதன் தனிச்சிறப்பாகும். இவருடைய சைவத்திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூல் ஆகமக் கிரியைகளையும் அவற்றுடன் தொடர்பு பூண்ட விடயங்களையும் சுருக்கி கோவைப்படுத்தித் தருகின்றது. திருக்கோயில்களில் நித்திய நைமித்திய கிரியைகள் நிகழும் வேளை சென்று தரிசிக்கும் அன்பர்களுக்கு பயனுறும் வண்ணம் தாம் இந்நூலை அமைத்ததாக முன்னுரையிலே பேராசிரியர் கூறியிருப்பர். சிற்பம், ஓவியம், கட்டிடக் கலை, சங்கீதம், நாட்டியம் ஆகிய நுண்கலைகளில் மோகம் கொண்ட மேனாட்டவர்களுக்கும் கலைகளின் வரலாற்றுச்சிறப்பினை விளக்கும் பண்பாட்டு நூலாக அமைந்திருக் கின்றது. மேலும் சம்ஸ்கிருதம் கற்கும் மாணவர் நலன் கருதி இலகு போதம், I, II கிரந்தாட்சர இலகுபோதம் என்னும் இலக்கண நூல்களையும் வெளியிட்டார். ஸ்ரீவடிவாம்பிகா பஞ்சரத்தினம், ஆச்சாரிய

சுவாமிகள் பஞ்சரத்தினம், குருஸ்தோத்திரம் போன்ற அவரது தோத்திர இலக்கியங்கள் அவரது புலமைக்கு மேலும் சான்றுகளாகும். கிரியைகளை நிகழ்த்துவதிலும், நிகழ்த்துவிப்பதிலும் மிகுந்த அறிவு பெற்ற இவர் முனீஸ்வரத்திலும் வடிவாம்பிகை அம்பாளுக்கும், நல்லூர் கமலாம்பிகைக்கும் வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி காலங்களில் செய்யும் சண்டிஹோமம், ஸ்ரீசக்கர பூசை என்பவை தனித்துவமானவை. முன்னேஸ்வரம் வசந்த நவராத்திரி பூஜைக்காலங்களில் மாணவர் அதனைப் பார்த்து நலம் பெறும் பொருட்டு அவர்களையும் அழைத்துச் சென்று பூஜைக்காரியங்களை காண்பித்து மாணவர்களை மகிழ்விப்பார்.

இந்து சமயத்திற்கும் அந்தண சிவாச்சாரிய சமூகத்திற்கும் எல்லாவற்றிகும் மேலாக கல்விச் சமூகத்திற்கம் அளவிறந்த பணியாற்றி நிறைகுடமாக விளங்கி தனது எழுபத்தொன்பதாவது வயதில் மறைந்த பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் பணி என்றென்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

# சம்ஸ்கிருத தமிழ் நீதியிலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்.

**அறிமுகம்**

வாழ்க்கையை வழிமொழிந்து செல்பவை இலக்கியங்கள். இவற்றுள் நீதி இலக்கியங்கள் தனிமனிதனையும், சமூகத்தையும் சுத்திகரிக்கும் பணியைச் செய்பவை. மனிதப்பண்புகளும், வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சூழலில், மனிதப்பண்புகளை நினைத்துக் கூட பார்க்கமுடியாத காலச்சூழலில் தனிமனிதனையும், சமூகத்தையும் நெறிப்படுத்த நீதியிலக்கியங்களின் பங்கு இன்றயமையாதது. தேச, கால, வர்த்தமானங்களுக்கமைய இவை வரையப்பட்டாலும் இவையுணர்த்தும் அறக்கருத்துக்கள் ஒரு நாட்டினர்க்கோ, ஒரு மொழியினருக்கோ சொந்தமானவையல்ல. மானிடம் முழுமைக்கும் இவை பொதுச்சொத்தாகும் புராதன மொழிகளான சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பல்துறை சார்ந்த நூல்கள் காணப்படுகின்றன. எண்ணிறைந்த நீதி நூல்களும் இம் மொழிகளை அலங்கரிக்கின்றன. இவற்றிலே காணப்படுகின்ற நீதிகளை - ஒழுக்க விடயங்களை தொகுத்துக் கூறுவதே இப்பேருரையின் நோக்கமாகும்.

**நீதி என்ற பதம்.**

நீதி என்ற சம்ஸ்கிருதச்சொல் இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, மரபு, அரசியல் சூழ்ச்சித்திறன் எனப்பல பொருட்களைத் தருகின்றது. (Willams.M,1899,p.565) ஒழுக்கவிடயங்களைக் கூறும் நீதி நூல்களும் முன்னர் இராஜநீதி என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டன. பல ஒழுக்கவிடயங்களைக் கூறும் சாணக்கிய சதகத்தை அதன் ஆசிரியர் சாணக்கியன், இராஜநீதி என்றே கூறுகின்றார்.

*"நாநா சாஸ்த்திரோத்திருதம் வக்ஷயே ராஜநீதி சமுச்சயம்"*

(சாணக்கிய நீதி 1.3)

என்ற மேல்வரும் செய்யுளால் இதனையறியலாம். இராஜநீதி என்ற பெயர் வழங்கப்பட்ட போதும் அரசியலைப் பற்றி மிகச்சில நல்லுரைகளே காணப்படுகின்றன. மனித இயற்கை பற்றியும், மக்கள் தம்முள் எவ்வாறு பழக வேண்டும் என்பது பற்றியும், மனித வாழ்வு, செல்வம், வறுமை,விதி, பெண்கள் இயல்பு பற்றியெல்லாம் இதில் கூறப்பட்டுள்ளன. (நடராஜன். சோ, 1999,பக் 173, 174) நீதி நூல்கள் மட்டுமல்லாது பல்வேறு இலக்கிய வகைகளை எடுத்துக் கொண்டாலும் அவற்றுக்கெல்லாம் அரசன் சார்புடைய பல களங்களை நாம் காணலாம். அரசன் குடிகளை ஏற்படுத்தி சில ஊர்களை அமைத்து சமுதாயங்களையுண்டாக்குகிறான். எனவே அரசனை ஒதுக்கிவிட்டு நீதிகள் எழுவதில்லை. “மன்னன் எவ்வழி மக்கள் எவ்வழி” என்ற பழஞ்சமுதாயத்தின் பழமொழி ஈண்டு நினையத்தகும். தமிழில் நீதி நூல்கள் அறநூல்கள் என்ற பொருளிலும் வழங்கப்படுவது சுட்டத்தக்கது. (திருநாவுக்கரசு.மு, 1977,ப.13 ) மனிதன் தனக்கென வகுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே தமிழில் அறம் என அழைக்கப்படுகின்றது. சம்ஸ்கிருதத்தில் தர்மம் என்று சொல்லப் படுகின்ற புருஷாத்தத்துடன் இந்த அறம் இணைந்தது.

**சம்ஸ்கிருத தமிழ் நீதியிலக்கியங்கள்.**

வேதவிலக்கியங்களும், உபநிஷதங்களும், இதிஹாச புராணங்களும் நீதிச்செய்யுட்கள், கதைகள் செறிந்தவை. மகாபாரதத்திலே குறிப்பாக அனுசாசன, சாந்தி பர்வங்களிலே நீதிநெறிகள் மிகவும் செறிந்து காணப்படுகின்றன. பகவத்கீதை, விதுரநீதி போன்றன தத்துவத்தையும், நீதியையும் கற்பிக்கும் நோக்கத்தோடு மஹாபாரதத்திலே செருகப் பட்டுள்ளன. பௌத்த ஜாதகக்கதைகள் நீதியைப் புகட்டுகின்றன. சாணக்கிய சதகம் அன்றாட வாழ்வியல் ஒழுக்கங்களைக் கூறும் நூறு செய்யுட்களைக் கொண்டது. கி. பி ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பர்த்திருஹரியார் நீதி, சிருங்காரம், வைராக்கியம் என்ற மூன்று விடயங்கள் மீது நூறு, நூறு செய்யுட்கள் இயற்றினார். சதக வடிவிலே எழுதப்பட்ட இந்நூல்கள் தமிழிலே திருக்குறளையொத்த பெருமை யுடையவை. இவரைத்தொடர்ந்து சதக வடிவிலே பலர் நீதி நூல்களை இயற்றினர். பல்லடசதகம் (கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு), ஷேமேந்திரரின் சாருசார்ய சதகம் (கி. பி பன்னிரண்டாம் நூற்றாண்டு), சில்கஹணரின்

சாந்தி சதகம் (கி. பி பன்னிரண்டாம் நூற்றாண்டு), நீலகண்டதீட்சிதரின் கி.பி பதினேழாம் நூற்றாண்டு) அந்யோபதேசதகம், கலிவிடம்பனம், வைராக்கிய சதகம் முதலியன குறிப்பிடற்பாலன. விஷ்ணுசர்மாவின் பஞ்சதந்திரமும், நாராயணரின் ஹிதோபதேசமும் பெரும்பாலும் மிருகங்களையே கதாபாத்திரங்களாக கொண்டவை. நரியும் சிங்கமும் எலியும் மனித குணங்களை ஏற்று இவற்றிலே காட்சியளிக்கின்றன. இவற்றிலே கதைசொல்லும் பாகங்கள் உரைநடையிலும் நீதிகள் சுலோகங்களாகவும் அமைந்துள்ளன.

அறம் பற்றிய கருத்துக்கள் சங்கவிலக்கியங்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியம்

*"இன்பமும் பொருளம் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை"*

(தொல்காப்பியம் பொருளியல் நூற்பா 27)

என உறுதிப்பொருட்களை எடுத்துரைக்கின்றது. சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய காப்பியங்கள் நீதியுரைத்தாலும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார், நான்மணிக்கடிகை இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திருக்குறள், ஏலாதி, திரிகடுகம், பழமொழி நாநூறு, ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி போன்ற பதினொரு நூல்களே தனித்து நீதியைப் பொருளாகக் கொண்டவை. இவை தவிர பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரரின் நீதி நெறிவிளக்கம், சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நன்னெறி, நீதிநெறிவெண்பா, பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், அதிவீரராம பாண்டியன் இயற்றிய வெற்றிவேற்கை, நறுந்தொகை, உலகநீதி போன்றவை பிற்காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்களில் சிறந்தனவாம். சம்ஸ்கிருத சதக நூல்களைப் பின்பற்றி எழுந்த குமரேசசதகம், அறப்பளீஸ்வர சதகம், தண்டலையார் சதகம் என்பன நீதி பற்றி எழுந்த தமிழ்ச் சதகங்களாகும்.

**இரு மொழிநீதி இலக்கியங்களிலும் பொதுமைப் பண்பு.**

சம்ஸ்கிருத, தமிழ் இலக்கியங்கள் பலவும் பல்வேறு விடயங்களில் ஒன்றுடன் ஒன்று தம்முள் கொண்டும் கொடுத்தும் உறவுகளைப் பேணியுள்ளன. இந்த வகையில் நீதி இலக்கியங்களும் ஒன்றுடன் ஒன்று பொதுமையான பண்புகளை பெற்றுள்ளன. சம்ஸ்கிருத நீதி இலக்கியங்கள் மட்டுமன்றி குறிப்பாக பிற்கால தமிழ் நீதி இலக்கியங்களும் வேதவிதிஹாச, புராணக் கதைகளையும் கோட்பாடுகளையும் கொண்டுள்ளன. தணடலையார் சதகம் விவேகசிந்தாமணி போன்ற நூல்களில் பஞ்சதந்திர ஹிதோபதேசக் கதைகள் கூறப்பட்டுள்ளன. நல்வாழ்க்கை வாழ இறையருள் அவசியமென வலியுறுத்துகின்றன. விதி, கர்மம் என்ற கோட்பாடுகளை ஒழுக்கவியலுடன் தொடர்புறுத்துகின்றன. குடிமக்களின் நலன் அரசனின் செங்கோலிலேயே தங்கியுள்ளது என்பதை எடுத்துக் கூறுகின்றன. புறவாசாரங்களை விட அகவாசாரங்களுக்கு முதன்மையளிக்கின்றன. நல்லறத்திற்கு துணையாக விளங்குவது இல்லறமென்றும் இல்லாளின் பங்குஅதில் அவசியமானதென்றும் அவள் நற்குணம் படைத்தவளாக இருக்கவேண்டுமென்றும் கூறுகின்றன. துறவு நின்றார்க்கு வீடு பேறு நிச்சயம் என்பதை வலியுறுத்துகின்றன.

**நீதிகள் கூறப்படும் உக்தி.**

நீதி இலக்கியங்களை சுவைபடக் கூறுவதற்கம் மக்கள் மனதிற் பதியச்செய்வதற்கம் கவிஞர்கள் பல உக்திகளைக் கையாண்டுள்ளனர்.

1. உவமை, உருவகங்கள் தற்குறிப்பேற்றம், அதிசயோக்தி போன்ற அணிநயங்கள் பொருந்தக் கூறுவது.
2. தமது எண்ணங்களை தாமே கூறாது பிறர் கூறுவது போன்று கூறுவது.
3. மனதை முன்னிலைப்படுத்தி சில நியமங்களை உபதேசிப்பது.
4. பொதுவாக தம்மைப் போற்றி ஆதரிக்கம் வள்ளலையோ, அரசனையோ விளித்துக் கூறுவது.
5. தோழன், தோழி, தலைவன், தலைவி கூற்றாக கூறுவது பொதுவாக சிருங்கார சதகத்திலுள்ள பாடல்கள் இவ்விதம் அமைந்துள்ளன.

6. மரங்கள், பறவைகள், விலங்குகள் முதலியவற்றின் மேல் தம் கருத்தை ஏற்றிக் கூறுவது. இது அந்யோக்தி என்று கூறப்படும்.

நீதியிலக்கியங்கள் மிகவும் எளிமையானவை. மனித வாழ்க்கைக்கு தேவையான நீதிவாக்கியங்கள் எல்லாம் வேத, விதிகாசங்களில் அடங்கியிருக்க ஏன் நீதியை கவிதைகளில் போதிக்க வேண்டும் என்ற கேள்விக்கு நீலகண்ட தீட்சிதர் விடை கூறுகின்றார்.

"சாஸ்திரங்களில் சொல்லாட்சி கடுமையாகவிருக்கும் பொருள் தெரிவது அரிதாகத்தோன்றும் அதே விஷயத்தை கவியின் வாக்காகக் கூறினால் சொல் இனிமை பயக்கும் பொருளும் எளிதாக விளங்கும். உள்ளங்கையில் ஒரு இரத்தினத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் அதன் அழகு முழுவதும் நமக்குத் தெரிகிறது. உயர்ந்த நாகரத்தினம் பாம்பின் தலையில் இருக்கிறதே என்று அதை எடுத்து அனுபவிக்க முடியுமா?" என்று வினாவுகின்றார். (சுப்பிரமணியன்.அ.வெ. ,2003, ப.192) இதிலிருந்து நீதி இலக்கியங்கள் மிகவும் எளிமையும் இனிமையும் உடையவை என்பது புலனாகின்றது. நீதி இலக்கியங்கள் கூறும் விடயங்களை,

1. சமய வாழ்வியல் விழுமியங்கள்
2. அரசியல் வாழ்வியல் விழுமியங்கள்
3. தனி மனித சமூக வாழ்வியல் விழுமியங்கள்
4. இல்லற, துறவற வாழ்வியல் விழுமியங்கள்.
5. பிறவிடயங்கள் அடங்கியவை.

என்று வகுக்கலாம்.

**சமய வாழ்வியல் விழுமியங்கள்.**

சமய வாழ்வுக்கு ஒழுக்கநெறி இன்றியமையாதது. சமைத்தல் என்ற சொல் பக்குவப்படுத்தல் என்று பொருள்படும். மக்களை பக்குவப் படுத்துவது சமயம். மனிதன் புலன்களின் வழிவரும் அழுக்கை நீக்கி பொறிகளின் தூய்மை காத்து தம்மைப் பக்குவப்படுத்த உதவுவது சமயம் இறைவனே புலன்கள் வழிவரும் அழுக்கை நீக்க உதவுபவன். அவன் வழி நிற்கும் மெய்யான ஒழுக்கநெறியே சமயம். திருவள்ளுவர்,

*"பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய் தீர் ஒழுக்கம்*

*நெறிநின்றார் நீடு வாழ்வர்"* (குறள் 6)

என்று பொய்தீர் ஒழுக்கமாக சமயத்தைக் கூறுவர்.

இயற்கையிலன் ஒரு சீர்மை, ஒழுக்கவாழ்வின் இன்றியமையாமை என்பவற்றின் குறியீடாக ரிதம் என்ற சொல் சம்ஸ்கிருத மொழியில் வணக்கத்துக்குரியதாயிற்று. வருணன் ரிதத்தினை ஒழுக்கத்தினைக் காப்போன் என்ற பொருளில் ரிதகோபன் எனப்பட்டான். வருணன் ஒழுக்கத்தைக் கட்டிக்காத்து அறத்துக்கெதிராக நடப்போரை தண்டிக்கும் ஆற்றல் பொருந்தியவனாக கூறப்பட்டான். இயற்கை ஒழுங்கை மீறியவர்கள் தண்டிக்கப்பட்டனர். அகாலத்தில் வசந்தத்தை ஏற்படுத்தி சிவன் மனதில் காமத்தை ஏற்படுத்த முயன்ற மன்மதன் சிவனாலே தண்டிக்கப்பட்ட வரலாற்றை குமாரசம்பவம் கூறுகிறது.

**இறைவன் உண்டு என்பதற்கான காரணங்கள்.**

மனித இன வரலாற்றில் வழிபாட்டு மரபு மிகத்தொன்மையானது தொடக்ககாலத்தில் மனிதன் இயற்கையில் நடந்த மாற்றங்களைக் கண்டு அச்சம் கொண்டு அவற்றை வழிபடத் தொடங்கியதே வழிபாட்டின் தொடக்கத்திற்கு காரணமாக அமைந்தது. உலக வரலாற்றில் இயற்கை வழிபாடு மிகத்தொன்மையானதாகும். இறைவனின் தன்மை , உருவம், அருள்தன்மை குறித்த கருத்துக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் நிலவுகின்றன. இலக்கியங்களில் இறைவன் தன்மைகளும் இறைவன் உண்டு என்பதற்கான காரணங்களும் கூறப்படுகின்றன. இறைவனே தவம் செய்து உலகைப் படைத்ததாகவும், படைத்தபின் அவற்றுள்ளே தானே நிறைந்ததாகவும் வெளிப்பட்டவை வெளிப்படாதவை அறிவு அறியாமை உண்மை உண்மையற்றவை என்று அவரே ஆனதாகவும் ஆதலால் எல்லாவற்றிற்கும் அடிப்படை அவரே என்றும் தைத்திரீய உபநிடதம் கூறுகிறது. (தைத்திரீயம் 6.3)

வேதநாயகம்பிள்ளை இறைவன் இருப்பது உண்மையென்றும் அதற்கான சான்றுகளையும் தமது நீதி நூலில் உலகியல் அடிப்படையில் எடுத்துக் கூறியுள்ளார். உலகின் தோற்றத்திற்கும் உலகப்பொருள்களின் தோற்றத்

திற்கும் காரணம் உண்டு ஒன்றிலிருந்து மற்றொன்று உருவாகின்றது. மாற்றங்களுடன் புதிய பொருட்களைத் தோற்றுவிக்கின்றது. இது உலக இயல்பு இவ்வுலக நடைமுறைகள் அனைத்தும் தனக்கு மூலமான ஒன்றிலிருந்தே நிகழ்கின்றன. அந்த மூலம் இறைவன் என்பதும் கவிஞர் வேதநாயகம்பிள்ளையின் சிந்தனை. அரண்மனைகளைக் கண்டதும் மன்னனின் நினைவும் குண்டலத்தைக் கண்டதும் பொற்கொல்லனின் நினைவும் ஆடையைக் கண்டதும் அதனை நெய்தவனின் நினைவும் மனதில் எழுவது இயற்கை. அரண்மனை, குண்டலம் , ஆடை இவற்றைக் கண்டதும் தொடர்புடைய பொருட்கள் நினைவில் வரும் பான்மையில் இவ்வுலகத் தோற்றத்தை காணும் போது அதனைப் படைத்தவன் உண்டு என்பதை உணரவேண்டும்.

*" மண்டப மாதி கண்டோர் மயனுளன்*
*என்னல் போலுங்*
*குண்டல முதல்கண்டோர் பொற்கொல்லனுண்*
*டென்னல் போலும்*
*ஒண்டுகில் கண்டோர் நெய்தோன் ஒருவனுண்*
*டென்னல் போலும்*
*அண்டமற் றகண்டகஞ் செய்தோன் உளனென*
*அறிவாய் நெஞ்சே"* (நீதி நூல் - 9 )

ஓவியம் ஓவியன் இன்றி அமைவதில்லை பாவை அதை அசைத்து நடிக்கச் செய்பவர்கள் இன்றி அசைந்து நடித்தல் இல்லை யாழ் மீட்டுபவர்கள் இல்லாமல் இசையை வெளிப்படுத்துவதில்லை அவ்வாறே உலகப் பொருள்களுக்கான அசையும் அசையாத்தன்மையை கொடுத்தவன் இறைவனாவான். (நீதி நூல் - 10 ) இதனால் உலகப் பொருள்களில் எல்லாம் நிறைந்திருக்கும் தன்மை அறியப்படும். "மரங்களின் அசைவில் காற்று உருவாகின்றது. புகையெழும் காரணத்தால் நெருப்பு இருப்பதை உணரமுடிகின்றது. மணம் கமழ்வதால் மலரின் இருப்பை அறிய முடிகின்றது. உலகம் தோன்றி மனிதன் கண்முன் நிலைபெற்றிருக்கும் காரணத்தால் உலகத் தோற்றத்திற்கு இறைவனே காரணம் என்னும் உண்மையை அறியமுடிகிறது." (நீதி நூல் -11) "குடும்பத்தின் நிலை

பேற்றிற்கும் நற்செயல்கள் நடைபெறுவதற்கும் கட்டுக்கோப்பாக இருப்பதற்கும் குடும்பத்தலைவன் முக்கியமானவன். அவ்வாறே இவ்வுலகை இயக்கும் பரம்பொருளான இறைவன் இல்லை என்றால் உலகம், சூரியன், சந்திரன் முதலான கோள்களின் இயக்கம், நட்சத்திரங்களின் தோற்றம், உலகத்தில் பெய்கின்ற மழை, மக்களின் மகிழ்ச்சியான வாழ்வு எவையும் நிகழாது". என நீதி நூல்கள் கூறுகின்றன. (நீதி நூல் - 12 )

**இறைவனும் கர்மத்துக்கு ஆட்பட்டவரே.**

உலகின் செயல்களை அவதானிப்பவன் என்ற கருத்துப்பட 'கர்மாத்யக்ஷஹ' என சுவேதாஸ்வதர உபநிடதம் இறைவனைக் கூறும். (சுவேதாஸ்வதரம் 6.11) உலகுயிர்களை ஆட்கொள்வதற்கான தாமும் கர்மத்திற்கு ஆட்பட்டவராக அவதரிப்பதை நீதி சதகம் கூறுகிறது.

பிரமா படைத்தற்தொழிலைச் செய்ய பிரபஞ்ச அண்டத்திலே குயவனைப் போல் நியமிக்கப்பட்டுள்ளார். உருத்திரன் கபாலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அலைகிறான். விஷ்ணு தசாவதாரங்களை எடுத்துக் கொண்டு துன்பத்திற்காளாகின்றான் இவையனைத்திற்கும் கர்மமே காரணமென கர்மத்தின் வலிமையையும் பர்த்திருஹரி கூறுவர்.

ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे

विष्णुर्येन दशावतारगगने क्षिप्तो महासङ्कटे।

रद्रो येन कपालपाणिपुटके भिक्षाटनं सेवते

सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे॥

(பர்த்திருஹரி நீதி சதகம் - 93)

**விதிக்கோட்பாடு.**

ஊழ், விதி, நியதி, விலக்கமுடியாத முடிவு, ஆற்றல், முன்வினைப் பயன் என்று சொல்லப்படுகின்ற விதி பற்றிய கருத்துக்கள் இந்துக்களால் மட்டுமின்றி பௌத்தர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. நல்லவர்கள் துன்புறுவதையும் தீயவர்கள் இன்புறுவதையும் உலகில் கண்கூடாகப் பார்க்கிறோம்.

*"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்*
*செவ்வியான் கேடும் நினைக்கப்படும்"* (குறள் : 169) என்று இதனை வள்ளுவர் குறிப்பிடுவர். இந்நிகழ்சிக்கு காரணமான விதிக்கோட்பாடு வலிமையாக முன்வைக்கப்படுகின்றன நடப்பது நடந்தேதீரும் என்ற கருத்துப்பட பர்த்திருஹரி தமது நீதி சதகத்தில் ஒரு கதையினைக் கூறுவர். மொட்டைத் தலையன் ஒருவன் சூரியகிரணங்களின் தாக்குதற்கஞ்சி ஒரு பனைமரத்தின் அடியில் போய் நின்றான். ஒருகணம் நிழலின் இன்பத்தை அனுபவித்தான் அடுத்த கணம் பனைமரத்திலிருந்து ஒரு பெரிய பனம் பழம் அவன் தலையில் விழுந்தது. அவனது தலை இதனால் உடைந்து போயிற்று விதிவசத்தால் தாக்குண்டவன் எங்கு போனாலும் அவனுக்கு ஆபத்து உண்டாகும். அவனைத் பின்தொடர்ந்து ஆபத்து வரும்.

खर्वाटो दिवसेश्वरस्य किरणैः सन्तापिते मस्तके

गच्छन्देशमनातपं विधिवशात्तालस्य मूलं गतः।

तत्राप्यस्य महाफलेन पतता भग्नं सशब्दं शिरः

प्रायो गच्छति दैवहतकस्तत्रैव यान्त्यापदः॥

(பர்த்திருஹரி நீதி சதகம் - 84)

மனிதன் எத்தனை ஆசை கொண்டாலும் அடையநினைத்தாலும் அவனது முன்வினைப்படியே கிடைப்பது கிடைக்கும். ஒருபடி அளவுள்ள நாழியில் நாழியளவு மட்டுமே அளக்கவியலும். அமுக்கியளந்தாலும் அளவைவிட அதிகமாக அளக்கவியலாது. விதிப்படி கிடைக்க வேண்டியது கிடைக்கு மென்று

*ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்*
*நாழி முகவாது நால்நாழி - தோழி*
*நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்*
*விதியின் பயனே பயன்* (மூதுரை -12)

குமரேச சதகம் விதிக்கோட்பாட்டை புராணச் செய்திகளுடனும் நடை முறை வாழ்க்கையுடனும் தொடர்புபடுத்தி மனிதன் விதியின் விளைவுகளை எதிர்கொண்டே ஆகவேண்டும் என்னும் சிந்தனையைப் பதிவு செய்துள்ளது. மனிதனுக்கு மட்டுமல்ல மனிதனைப் படைத்த இறைவனுக்கும் விதிசெயற்படும் காலம் உண்டு என்பதை நாடாள வேண்டிய இராமன் காட்டில் வாழும் சூழல் உருவானது. தேவர்கள் அமுத முண்ண இறைவனுக்கு விடம் கிடைத்தது. தேவர்களை சிறைமீட்ட முருகன் களவில் வள்ளியை மணந்தது பிரமன் சிறைப்பட்டது உண்மையே பேசும் அரிச்சந்திரன் துன்பங்களை அனுபவித்தது என்னும் அனைத்தும் விதியால் நிகழ்ந்த செயல்களே என்று குமரேசசதகம் குறிப்பிடுகின்றது. வினையை இறைவனாலும் வெல்லவியலாது என்பதை

*அன்றுமுடி சூடுவதி ருக்கரகு ராமன்முன்*
*அருங்கா டுரைந்த தென்ன*
*அண்டரெல்லாம் அமிர்தம் உண்டிடப் பரமனுக்*
*காலம் லபித்ததென்*
*வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்*
*வேடிச்சியை சேர்ந்த தென்ன*
*மேதினி படைக்கும் அயனுக்கொரு சிரம்போகி*
*வெஞ்சிறையில் உற்றதென்ன*
*என்னுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன*
*தென்னகாண் வல்லமையி னால்*
*எண்ணத்தி னாலொன்றும் வாராது பரமசிவன்*
*எத்தனப் படிமுடியு மாம்.* (குமரேச சதகம் - 44: 1-6)

நீதி நூல்கள் ஊழ்வினை என்று சோம்பி இருக்கக் கூறவில்லை விதியம் வினைப்பயன் வழியே பயன் தருமென அவை கூறுகின்றன.

டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்க்கையை சீட்டாட்டத்துக்கு ஒப்பிடுகிறார். சீட்டுக்களை நாம் விருப்பப்படி தேர்ந்தெடுக்க முடியாது. அவை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ஆனால் கிடைத்த சீட்டுக்களை வைத்து வெற்றியடைவதும் தோல்வியடைவதும் நம் அதிஷ்டத்தைப் பொறுத்தது.

நம் உடல், அறிவாற்றல், பெற்றோர் சூழ்நிலை முதலியவை நாம் தேர்ந்தெடுக்கப்படாமலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த வரம்புகளை மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய செயலுரிமை மனிதனுக்கு இருக்கிறது. (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி II , 1991, பக். 53 )

**அரசநீதி விழுமியங்கள்.**

பண்டைய நீதி நூல்கள் மன்னனை முதலாகக்கொண்டே குடிகள் செயற்படுவதால் மன்னனுக்குரிய அற ஒழுங்குகளை கூறத்தவறவில்லை 'மன்னன் உயிஉத்தே மறுதலையுலகம்' என்று புறநானூறு கூறுவது கருதத்தக்கது. (புறநானூறு 186) அரசனின் மகிழ்ச்சி குடிமக்களின் மகிழ்ச்சியிலேயே தங்கியுள்ளது. குடிகளுக்கு எது திருப்தி அளிக்குமோ அதையே மன்னன் செய்யவேண்டும். உலகில் வாழும் குடிகள் எல்லாம் மழையை நம்பி வாழ்தல் போல குடிமக்கள் அரசநீதியை நம்பி வாழ்கின்றனர். வள்ளுவர் இதனை

*"வான் நோக்கி வாழும் உலகு எல்லாம் மன்னவன்*

*கோல் நோக்கி வாழும் குடி"* (குறள் 543) என்ற பாடலில் பதிவு செய்துள்ளார். மஹாபாரதத்தில் வரும் சாந்திபர்வம், விதுரநீதி, சுக்கிரநீதி போன்றனவும், மனுதர்மசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம் போன்ற தர்மசாஸ்திரங்களும் தமிழ்ச்சங்க நூற்களான புறநாநூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை போன்றவற்றில் அரசு, ஆட்சிமுறை குறித்த செய்திகள் காணப்படுகின்றன. சங்கம் மருவிய கால அறநூல்களில் அரசியல், வினைத்திறம் , அமைச்சியல், படைவீரர்களின் ஆண்மை, மன்னர்களைச் சேர்ந்து ஒழுகுதல், அவர்களை அண்டிவாழும் முறை, நேர்மையாக ஆளும் தன்மை முதலிய பல விடயங்கள் கூறப்படுகின்றன. மன்னன் எவ்வாறு வாழவேண்டும் என்று மகாபாரதம் உபதேசிக்கின்றது. உறுதியாக செங்கோல் செலுத்தும் மன்னனை அது மயிலுக்கு ஒப்பிடுகின்றது. மயில் உறுதியான சிறகுகளைக் கொண்டிருப்பது போல அரசன் உறுதியான அமைச்சர் முதலியவர்களை கொண்டிருத்தல் வேண்டும். மயில் தன் தோற்றத்தால் காக்கை முதலியவற்றின் குறை தோன்றும்படி இருத்தல் போல அரசன் நேர்மையால் பகைவர்களுடைய

குறைகள் வெளியாகும்படி இருத்தல் வேண்டும். மயில் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு பாம்பு முதலியவற்றை அடிக்க எப்போதும் எச்சரிக்கையாக இருப்பது போல் அரசன் ஆசாரத்தில் இருந்து கொண்டு தண்ட நீதியில் கவனம் செலுத்துவான். (சாந்திபர்வன் ப.ப 94-95 )

விதுரநீதி 'சிறந்த தலைவன் எதுவும் பேசமாட்டான் ரகசியங்களை வெளியிட மாட்டான். கோபம், பெருமை, பொய்யான பணிவு ஆகிய வற்றை விலக்கிவிடுவான் துயரங்களில் சோர்ந்து போகாமல் சரியான மனநிலையில் இருப்பான்' என்று கூறும். (நடராஜன். ஆர். 2016,ப. 162).

ஜனங்கள் நன்கு போஷிக்கப்ப்டால்தான் பூமியிடமிருந்து அரசன் நல்ல பலனைப் பெறமுடியும் எனவும் (பர்த்திருஹரி நீதி சதகம் 46) கெட்டவர் களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவனும், கீழ்தரமான செய்கைகளை யுடையவனும் தர்மத்துக்கு கட்டுப்படாதவனுமாகிய அரசனை ஒதுக்க வேண்டும் என பர்த்திருஹரி கூறுவார். (பாத்திருஹரி நீதி சதகம் 59) நீதிசார் அனுபவத்திரட்டு என்னும் நூல் அரசன் செங்கோலை நடத்தும்கால் பதினொருவித ஒழுங்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. அவையாவன

1. நடுவுநிலை - எந்தச்செயலையும் ஆராய்ந்து நடுவுவழி நிற்றல் வேண்டும்.
2. காரணம் - செயலின் நோக்கையறிய வேண்டும்.
3. காரியம் - எந்தச் செயலின் காரியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.
4. செயலின் இடம் - இடம் அறிந்து வினையாற்ற வேண்டும்.
5. காலம் - இன்ன காலத்தில் இன்ன செயலைச் செய்யவேண்டும் என அறிதல் வேண்டும்.
6. விரிவறிதல் - விரிந்த முறையில் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கி ஆய்ந்து செய்ய வேண்டும்.
7. உக்தி - தகுந்த உக்தியைக் கையாள வேண்டும்.
8. கைவிடாதிருத்தல் - செயலை இறுதிவரை மேற்கொள்ள வேண்டும்.
9. தன்விழிபோல் காத்தல்- அரசாட்சியை விழிபோல் கருதல் வேண்டும்.

10. பேதம் - எதிரிகளை இனம் கண்டு பேதப்படுத்த வேண்டும்.

11. அறம் - அறத்தைப் போதிக்க வேண்டும்.

(நீதிசார அனுபவத்திரட்டு 82)

**தனிமனித சமூகவிழுமியங்கள்.**

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்தவை விழுமியங்கள் என்று சொல்லப்படுகின்றன. விழுமியங்கள் என்ற சொல்லுக்கு மதிப்புக்கள் என்ற பொருளும் உண்டு ஆதாவது மனிதனது வாழ்க்கையை மதிப்புக்குரியதாக மாற்றுவது விழுமியங்களாகும். மக்கள் இவற்றை வாழ்ந்து அறிந்து அடுத்த தலை முறைக்கு கொடுத்துச் செல்வர். இந்தவகையிலே நீதி நூல்கள் பல்வேறு தனிமனித சமூக அறவியல் ஒழுக்கங்களை கூறுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் சமூக அமைப்புக்குள் இயங்குபவன். இன்பத்தைக் கொடுக்கும் செயல்களில் ஈடுபடுவது மனித இயல்பு. ஒவ்வொருவரும் தமக்கு இன்பம் பயக்கும் முயற்சியில் மட்டுமே ஈடுபட்டால் அது மற்றவஉகளுக்கு துன்பத்தைத் தருவதற்கு ஏதுவாகும். சமுதாயம் பெறும் இன்பமே இன்பமாகும். தனிமனிதன் சுயநலதின் அடிப்படையில் தேடும் இன்பம் இன்பமாகாது.

*"அறத்தான் வருவதே இன்பம். மற்று எல்லாம்*

*புறத்த புகழும் இல"* (குறள்: 39 ) என்று கூறுவது கருதத்தக்கது.

இன்பத்தைக் கொடுப்பது அறம் என்று கூறாமல் அறம் எதைக் கொடுக்கிறதோ அது மட்டுமே இன்பம் என்கிறார் வள்ளுவர். பிறரை துன்புறுத்தியோ நேர்மையில்லாத வழியில் வரும் இன்பத்தைப் பெற்றவர் புகழ் எய்துவதில்லை என்று கூறுகிறார். மானசோவுல்லாசம் என்ற நூல் இந்துக்களின் அறநோக்கத்தை புலப்படுத்தும் பகுதி களையுடையது. மன்னன் ஒருவனக்கு தேவையான அறவொழுக் கங்களைக் கூறுவது போல் அமைந்த பகுதியில் தனிமனித சமூக அறங்களும் இதில் கூறப்பட்டுள்ளன. பொய்மை, வஞ்சனை, பிறர்மனை விளைதல், உண்ணத்தகாதன உண்ணல் என்பவற்றை விலக்க வேண்டும். அழுக்காறு, இழிகுலத் தொடர்பு தவிர்த்தல் வேண்டும். கடவுளை வணங்கி

பசுக்களையும், அந்தணரையும் புரத்தல் வேண்டும். பிதிரரை வணங்கியும், விருந்தினரை ஓம்பியும், ஆசானைப் பணிந்தும், நோன்பு நோற்றும், தீர்த்தமாடுதல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். வறியவர், அநாதை, விதவை, துன்புற்றார், சுற்றத்தார், ஏவலாளர் ஆகியோருக்கு நல்ல உணவூட்டியும் தன்னை வந்தடைந்தார்க்கு அபயம் அளித்தும் உதவிபுரிதல் வேண்டும். (பசாம். ஏ.எல் , 2005, ப. 45)

புதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மிகவும் சிறப்புடையது என்று கூறப்படும் திருக்குறள், வெ:.காமை, அழுக்காறாமை, பொறையுடைமை. ஒழுக்கமுடைமை, இனியவை கூறல், விருந்தோம்பல், அன்புடைமை, வாய்மை முதலிய அறங்களை விதந்தோதுகின்றது. எனினம் புற ஆசாரங்களை விட அகவொழுக்கங்களே நன்மை பயப்பவை என்பதை நீதி நூல் ஆசிரியர்கள் கூறத்தவறவில்லை. "நல்ல செயல்களே ஒருவன் இப்பிறவியிலே வெண்கொற்றக் குடையுடன், தூயமாளிகை, இன்பம் முதலிய போகங்களை அனுபவிக்க காரணமாக அமைகின்றன" என நீதி நூல் ஆசிரியர் பர்த்திருஹரியும்

*'கண்ணோட்டம் என்னும் கழி பெருங்காரிகை*
*உண்மையான் உண்டு இவ்வுலகு'.* (குறள் 571)

என வள்ளுவரும் குறிப்பிடுதல் காணலாம். இவ்வுலகம் அழியாமல் நிலைபெறுவதற்கு காரணம் இரக்ககுணம் தான் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

**கல்வி.**

தனி மனித சமூக மேம்பாட்டின் முதன்மையான காரணிகளின் ஒன்றாக விளங்குவது கல்வி மாந்தர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெற செய்வது கல்வி என்று காந்தியடிகள் கல்விக்கு வரையறை காண்பர். (சந்திரசேகரம்.ப, 1975 ப.2 ) கல்வியால் ஏற்படுகின்ற ஒப்புரவு, அன்பு, கண்ணோட்டம், வாய்மை என்பன வாழ்க்கையின் அடித்தளம் என்பது வள்ளுவ மரபு. 'வாக் பூஷணம் பூஷணம்' (பர்த்திருஹரி நீதி சதகம் 2.16 ) என நீதி சதகம் கூறுவதை ஒத்து 'கல்வியழகே அழகு' என்று கூறுகிறது. (நாலடியார் 1:31).

கல்வி மேம்பாடு உள்ளவர் சமூகத்தில் பழகும் இயல்பு நுட்பம் வாய்ந்தது கற்றவர் சுற்றத்தவரிடம் இங்கிதமாய் நடப்பர் கெட்டவரைத் தந்திரமாக அணுகுவர் அரசரை சமயோசிதமாகவும் அறிஞரை நேர்மையாகவும் பேணிக்கொள்வர் (பர்த்திருஹரி நீதிசதகம் 2.22). பிற்காலத்தில் எழுந்த நீதி நூலான நீதிசார அனுபவத்திரட்டு கல்லாதவருக்கு மட்டுமன்றி கற்றவர்க்கும் நீதி அவசியம் என்பதை விளக்குகின்றது. அறிவாளி ஒருவனுக்குத் தேவையான குணங்களை அது கூறுகிறது.

*'அறிவினர்க்கு அடையாளம் அவர்*
*நாவில் நீதியது மிக நடனம் புரியும்.*
*குறியான கண்டிப்பு முண்மையுமே*
*பொருந்தவவர் ஒருமைமொழி குறிப்பர்*
*முறையறையா மற்றைய மூவரைப் போலும்*
*அகடவிகடங்கள் மொழியார்'* (நீதிசார அனுபவதிரட்டு 4.)

அறிவாளி நாவில் நீதி நடனம் புரியும் ஒன்றையே பேசுவர் நேரத்திற்கு ஏற்றாப் போல் வீண் பேச்சில் ஈடுபடமாட்டார். உண்மையை வளைத்துப் பேசார்.

**ஈகை.**

பொருட் செல்வத்தின் அவசியம் பற்றி நம்முன்னோர் கூறியுள்ளனர். தன் குடும்பத்தை நிலை நிறுத்தவும் தானதர்மங்கள் செய்யவும் பொருள் தேவை. தன் அந்தஸ்தை நிலை நிறுத்தவும் அது தேவையென சாணக்கிய சதகம் கூறுகிறது.

**"விஷமில்லாத பாம்பு கூட படமெடுத்து சீற வேண்டும். அது போல செல்வம் அற்றவர்களும் மற்றவர்களுக்கு பயத்தைக் கொடுக்கும் ஆடம்பரத்தைச் சற்றுக் கற்றுக்கொள்ளவேண்டும் இல்லாவிட்டால் சமூகத்தில் இகழ்ச்சி ஏற்படும்.** (சாணக்கிய நீதி 9 : 9 )

மனிதன் உயிர்வாழ்வதே பிறருக்கு வழங்கும் பொருட்டே பிறர் கேட்காமலே அவரின் உள்ளக்குறிப்பினை உணர்ந்து கையால் ஈயவேண்டும் என்பது நாம் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும். மனிதன் வாழும்போது மனிதனாக மதிக்கப்படுவதும் இறந்த பிறகு தெய்வமாக மதிக்கப்படுவதும் இந்த ஈகையால் தான் கிடைத்த பொருளை தானும் அனுபவியாது பிறருக்கும் கொடாது இருக்கும் உலோபிகளை கடவுளும் விரும்பார். (பர்த்திருஹரி நீதிசதகம் 4.35 )

*"பயன் மரம் உள்ளூவப் பழுத்தற்றால் - செல்வம்*
*நயன் உடையார் கண் படின்"* (குறள் : 216 )

இக்குறள் மூலம் எல்லோருக்கும் பயன் தருவது தான் செல்வத்தின் உண்மைப் பயன் என வள்ளுவர் உணரவைக்கிறார்.

**விருந்தோம்பல்.**

விருந்தோம்பல் இல்லறத்தாஉக்குரிய கடமைகளில் ஒன்றாகும். இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்க கடமைப்பட்டவர். அவருடன் நில்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உறைபடிகளாலும் உபசரித்தல் அவர் தம் கடமை என்று அறநூல்கள் கூறுகின்றன. பஞ்தந்திரம் கதை மூலம் விருந்தின் சிறப்பை விளக்குகின்றது. புறா ஒன்று தன் மனைவியாகிய பெண்புறாவை பிடித்த வேடனிடம் அவன் விருந்தினன் ஆகையால் அவனிடம் அன்பு காட்டி , உபசரித்து அவன் பசியைத் தீர்க்க தன் உடலையே அர்ப்பணித்தது. (பஞ்சதந்திரம் 3:8) விருந்தினரை ஓம்பாதவர்கள் சபிக்கப்பட்ட வரலாற்றை இதிகாசங்கள் கூறுகின்றன. திருக்குறள் தன்னிடம் வரும் விருந்தினர்களிடம் முகம் கோணாமல் உபசரிப்பவர்களின் வீட்டில் திருமகள் மகிழ்வுடன் இருப்பாள். (குறள் : 83) என்றும் விருந்தினரை நாள் தோறும் ஓம்புபவனது குடும்பம் ஒரு நாளும் வறுமையால் வாடுவதில்லை ((குறள் 82 ) என்றும் குறிப்பிடும. விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள் என்பது பழமொழி. விருந்து அளித்தல் மகிழ்ச்சி கரமானதாக இருத்தல் வேண்டுமே தவிர மனச்சுமையையும் வருத்தத்தையும் ஏற்படத்துவதாக இருக்கக் கூடாது. முகத்தில் இனிய

நோக்கம் இல்லாமல் உதட்டில் இனிய சொற்கள் இல்லாமல் ஒருவருக்கு கொடுத்தால் உண்பவருக்கு பசி அதிகமாகுமே தவிர குறையாது. இதனை விவேகசிந்தாமணி ,

*‘ஒப்பிடன் முகமலர்ந்தே*
*யுபசரித துண்மை பேசி*
*உப்பிலாக் கூழ் இட்டாலும்*
*உண்பதே அமிவுதமாகும்*
*முப்பழ மொடு பா லன்னம்*
*முகங் கடுத்திடுவாராயின்*
*கப்பிய பசியி னொடு*
*கடும்பசி ஆகுந்தானே’*

(விவேகசிந்தாமணி 4) என்னும் பாடலில் வலியுறுத்தும்.

**பகுத்து உண்ணல்.**

பகுத்து உண்ணல் அறங்களில் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. பகுத்துண்டு பலலுயிர் ஓம்பல்நூலோர் தொகுத்த அறங்களுள் தலையாயதாகும். கிடைத்தற்கரிய பொருளாயினும் பிறர்க்கு அளியாது தனித்துண்ணல் தகுதியுடைய செயலாகாது. இந்திரர்க்குரிய அமிர்தமே ஆயினும் இனிதென எண்ணி பண்டைய தழிச்சான்றோர் தனித் துண்ணலைச் செய்திலர். (புறநானூறு , 182: 1-3 ) என்னும் சிந்தனை பகுத் துண்ணலின் அருமையை விளக்குகின்றது. ‘பகிர்ந்து உண்’ (ஆத்திசூடி - 9). என்று பகுத்து உண்ணலின் அருமையினை ஔவையார் கட்டளையாகப் பதிவு செய்கிறார்.

**வாய்மை.**

வாய்மை என்னும் உண்மை பற்றி வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள் வலியுறுத்துகின்றன. ‘வாயு தேவனே உன்னை வணங்குகிறேன் நீயே கண்கண்ட தெய்வமாக இருக்கிறாய். நீயே ரிதம் ஆகின்றாய். நீயே சத்தியம்.’ என்று தைத்திரீய உபநிடதம் இறைவனை சத்தியத்துடன் இணைக்கிறது. (தைத்திரீயம் 1.1) மெய் அகிம்சையோடு கூடி நிற்கும் போது வாய்மையாகின்றது. வாய்மைப் பண்பு பற்றி

மஹாபாரதத்தில் பீஷ்மர் விளக்குவதாக அமைந்த பகுதி குறிப்பிடத் தக்கது. சில சந்தர்ப்பங்களில் பொய் மெய்யாகிவிடும் பசுவை ஒருவன் கொல்லவருகின்றான். வழியில் நின்றவனை , "இந்த வழியாகச் சென்ற பசுவை நீ பார்த்தனையா?" என்று ஒருவன் கேட்கிறான் அப்பொழுது மெய் சொன்னால் பசுவதை நேரிடும். பொய் சொன்னால் பசு பிழைக்கும் ஆதலால் பொய் மெய்யாகிவிடுகிறது. பொய் அகிம்சையுடன் கூடி நிற்கின்றது "இதுவே சத்தியம், இதுவே உண்மை" என்று பீஷ்மர் வாய்மை பற்றி விளக்குகின்றார். வள்ளுவர் இதனை

*"வாய்மை எனப்படுவது யாது எனில் யாது ஒன்றும்*
*தீமை லாத சொலல்* (குறள் : 291 ) என்று கூறுவர்.

பிறருக்கு எத்தகைய தீங்கும் இல்லாத சொற்களைக் கூறுவதே வாய்மையாகும்.

**பிறர் பற்றிய வீண் பேச்சு.**

பிறர் பற்றிய வீண் பேச்சு நிந்திக்கத்தக்கது தூற்றி பேசுதல் யார்க்கும் எளிது. ஆதன் விளைவைத் தாங்குதல் அரிதாம். தீயோர் பிறரின் பண்புகளை தூற்றியே பேசுவர்.

*"நாணமுள்ள மனிதனை மடையன் என்பர். வீரனை இரக்க மற்றவன் என்பர். குழைவாய்ப் பேசுபவனை கோழை என்பர். துணிவுடன் பேசுபவனை வாயாடி என்பர்."* (பர்த்திருஹரி நீதி சதகம் 5.48). விவேகசிந்தாமணி பஞ்சதந்திரக் கதைமூலம் புறங்கூறுவார் இயல்பை விளக்குகிறது.

*சொல்லுவார் வார்த்தை கேட்டு தோழமை*
*யிகழ்வான் புல்லர்*
*நல்லவர் விசாரியாமல் செய்வரோ*
*நரி சொற் கேட்டு*
*வல்லரி யெருதுங் கூடி மாண்டதோர்*

*கதையைப் போல*
*புல்லிய ரொருவராலே போகுமே யற்பர் நேசம்*

(விவேகசிந்தாமணி : 36)

சிங்கமும் எருதும் கூடி நட்பு பூண்டு வாழும்கால் நரி இடையே வந்து அவற்றை பகைமையூட்டியமை இப்பாடல் மூலம் நினைவுபடுத்தப் படுகின்றது.

**இணக்கமுடன் வாழ்தல்.**

தனி மனிதன் சமுதாயம் என்ற தகுதியைப் பெறவியலாது. சமூகத்தில் பிறருடன் இணைந்து இயங்கும் போது தான் நல்லிணக்கம், விட்டுக்கொடுத்தல் முதலிய நற்குணங்களையும், இரக்ககுணத்தையும் பெறுகிறான். தனி மனிதன் சமுதாய உணர்வுகளை உற்று நோக்கி தனனை அதற்கு தக்க முறையில் சீர் அமைத்துக் கொள்ள வேண்டும். சமூகத்திற்கு இணக்கமாக இருக்காவிட்டால் பழிகளைச் சுமக்க நேரிடும். சமூகத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நட்புக் கொள்ள வேண்டும். 'இணக்கமறிந்து இயங்கு' என்ற ஆத்தி சூடிப் பாடல் இதனை விளங்க வைக்கின்றது. (ஆத்தி சூடி .19)

“மூத்த சகோதரன் பிதாவுக்குச் சமனானவன் மனைவியும் புத்திரனும் ஒருவனது சரீரம், வேலைக்காரன் ஒருவனது நிழல் புத்திரியானவள் பரம கருணைக்கு பாத்திரமானவள். ஆதலால் இவஉகளை ஒதுக்காமல் பொறுத்துக் கொள்ள வேண்டும்” என மனு தர்ம சாஸ்திரம் கூறுகிறது (.மனு. iv. 85).

வறுமையால் இருக்கும் உறவுகளை உறவினர் மதிப்பதில்லை இதனை விவேகசிந்தாமணி

*“ஆலிலை பூவுங் காயும்*
*அளிதரு பழமும் உண்டேல்*
*சாலவே பட்சி யெல்லாந்*
*தன் குடியென்றே வாழும்*

*வாலிபர் வந்து தேடி*
*வந்திப்பர் கோடா கோடி*
*ஆலிலை யாதி போனால்*
*அங்கு வந்திருப்பார் உண்டோ”* (விவேகசிந்தாமணி 6)

என்ற பாடலின் வழி எடுத்துக்காட்டுகிறது. இதே சிந்தனையை குளம் ஒன்றை எடுத்துக்காட்டி

*‘அற்ற குளத்தின்அறுநீர்ப் பறவைபோல்*
*உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்திற்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே*
*ஒட்டி யுறுவார் உறவு’.* (மூதுரை 17)

இப்பாடல் நீர் வற்றிய குளத்திலிருந்து நீங்கிச் செல்கின்ற நீர் வாழ் பறவைகள் போல் வறுமையுற்ற காலத்தில் நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர்கள் அல்லர். நீர் அற்ற குளத்தில் உள்ள அல்லி , கொட்டி, நெய்தல் என்னும் தாவரங்கள் போல விலகாமல் சேர்ந்திருந்து இன்பதுன்பங்களில் பங்கெடுப்பவர்களே உறவினர்களாவார்கள். என்று குறிப்பிடுகின்றது.

**துணை வலிமை.**

குடும்ப வாழ்வில் உறவுகள் ஒருவர்க் கொருவர் துணையாய் உதவியாய் இருத்தல் வேண்டும். எவர் ஒருவரும் தன்தேவையை தன்னால் மட்டும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது. “தம்பியுடையான் படைக்கஞ்சான்” என்னும் பழமொழியும் ஒற்றுமையே வலிமை என்னும் சிந்தனையும் நோக்குதற்குரியன. நெல் இரு பகுதிகளையுடையது மேலே உள்ளது உமி. உள்ளே உள்ளது அரிசி. உமியின்றி வெறும் அரிசி மட்டும் முளைத்து பயன் இல்லை. அவ்வாறே எத்தனை வலிமையுடையவர்களும் அனைத்தையும் தன்னால் நிறைவேற்றிக் கொள்ளவியலாது என்று துணை வலிமையின் இன்றியமையாமையினை மூதுரை பதிவு செய்துள்ளது.

P 14168

*'பண்டு முளைப்ப தரிசியே யானாலும்*
*விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்*
*ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி*
*ஏற்ற கருமஞ் செயல்'.* (மூதுரை 17)

**இல்லாற வாழ்வியல் விழுமியங்கள்.**
**இல்லாள்.**

நல்லறத்துக்கு துணையாக விளங்குவது இல்லறமாகும் இல்லற வாழ்க்கையில் மனைவியின் பங்கு இன்றியமையாதது நற்குணமுடைய பெண் இருக்கும் வீட்டில் எல்லாச் செல்வங்களும் இருக்கும். அவளை வீட்டின் அதிதேவதையாக ரிக் வேதம் கூறுகின்றது. (X, 85.46). கணவனுக்கு பணிந்து கற்புக்கடம் பூண்டொழுகிய மனைவியரைப் பற்றிய கதைகளை இதிகாசங்களும் புராணங்களும் சித்தரிக்கின்றன இந்திய பெண்மைக்கு சிறந்த சான்றாக சீதை, சாவித்திரி, தமயந்தி போன்ற பெண்களை அவை சுட்டுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினுக்கும் பெண்ணே துணையாவாள் என்ற கருத்தும் அவளை அனபுடன் பேணவேண்டும் என்பதும் கூறப்பட்டுள்ளது. இனிமையற்ற சொற்களைப் பேசும் பெண்கள் இல்லத்தில் இருப்பதை விட வனத்திற்கு செல்வது நல்லதென சாணக்கிய நீதி கூறுகின்றது. (சாணக்கிய நீதி 1.44 )

கணவன் மனைவியன்பில் ஊடல் விளைந்த போதும் அவ்வூடலும் அறம் விளையக் காரணமாக அமைந்ததை ஐங்குறுநூறு தெரிவிக்கின்றது. இதனை

*'மாரி வாய்க்க வளம்நனி சிறக்க'* ( ஐங்குறுநூறு 10. 2 )

*'நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க'* (மேலது 1. 2) என்னும் மருதத்திணை சான்றுகள் மூலம் அறியலாம். திருவள்ளுவர் இல் வாழ்க்கை, வாழ்க்கை துணைநலம் என்னும் இரண்டு அதிகாரங்களில் இல்லறவாழ்க்கையின் மாண்பினை உணர்த்துவர். "இல்லற வாழ்க்கை நடத்துகின்ற இல்லறத்தான் இல்லறவியலோடு தொடர்புடைய உறவினர், நண்பர், எளியவர்கள் என்ற மூன்று வகையார்க்கும் உபகாரி. துறவிகளுக்கும் ஏழைகளுக்கும் அவனே துணை. முன்னோர்களை

நினைத்துச் செய்யவேண்டிய பூசைகளையும், தெய்வத்தை வழிபட்டு செய்கின்ற தான தர்மங்களையும் வீட்டுக்கு வந்திருக்கின்ற விருந்தினர் களையும் முறைப்படி உபசரிப்பது தான் அவளது கடமை. துறவறம் தவம் முதலிய மற்ற முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் காட்டும் சகிப்பு தன்மையை விட இல்லாளின் சகிப்பு தன்மையே மேலானது. (குறள் 41- 50 )

**விலைமாதர்கள்.**

கற்பு நெறி தவறிய பெண்கள் இல்லறத்தை நடத்தமாட்டார் என நீதி நூல்கள் தெரிவிக்கின்றன. வேசையர் வாக்கில் அமுதமும் மனதில் விஷமும் இருக்கும். (சிருங்கார சதகம் : 60) எனச் சிருங்காரசதகம் வேசையர் இயல்பைச் சுட்டுகின்றது. தீய பெண்களின் குணங்களை விவேகசிந்தாமணி பதிவு செய்துள்ளது.மேலே விழுந்து அழுவாள், தின்ற தாம்பூலத்தை எச்சிலாக இருப்பினும் தின்பாள் உன்னுடன் பிரியாமல் இருப்பேன் என்பாள், இவையனைத்தும் பொய்யாகும். இத்தகைய பொய்யான அன்பைக் காட்டும் பெண்களை அடைந்தால் வருவ தெல்லாம் துன்பங்களாகும் தீய பெண்களை நம்புபவர்கள் நாயை விடக் கீழானவர்கள் என்றவாறாக விவேகசிந்தாமணி கூறும் கருத்து சிந்திக்கத்தக்கது. ஏமாற்றும் குணமே தலையாயதாக இருக்கின்ற காரணத்தால் அவர்களை விட்டு நீங்கல் நன்மை தரும் என்பதை ,

*“வெம்புவாள் விழுவாள் பொய்யே*
*மேல்விழுந் தழுவாள் பொய்யே*
*தம்பலம் தின்பாள் பொய்யே*
*சாகிறே னென்பாள் பொய்யே*
*அம்பினும் கொடிய கண்ணாள்*
*ஆயிரம் சிந்தை யாளை*
*நம்பின பேடிகள் ளெல்லாம்*
*நாயினும் கடையா வாரே”* (விவேகசிந்தாமணி : 15)

என்னும் பாடல் வலியுறுத்துகிறது. மேலும் தீய பெண்களின் குணங்களையறிந்து அவர்களை விட்டு நீங்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**துறவற விழுமியங்கள்.**

உலக இன்பத்தை வெறுத்து இறைநிலைக்கு உதவும் பொருட்டு மனிதன் எடுக்கும் முடிவு துறவாகும். மனிதவாழ்வில் யாக்கை இளமை, செல்வம் என்ற மூன்றின் நிலையாமைகளை இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. நிலையற்ற இன்பத்தை நுகர மனிதன் செய்யும் எத்தனத்தை மஹாபாரதத்திலுள்ள ஒரு கதை கூறுகின்றது. மனிதன் ஒருவனை யானை ஒன்று காட்டில் துரத்தி வர அவன் பயந்து இடிந்து வீழ்கின்ற கிணற்றிலே வீழ்கின்றான். அங்கே ஒரு அறுகம் புல்லின் வேரைப் பற்றிக் கொண்டே தொங்குகின்றான். அப்போது கீழே இருந்த ஐந்து தலைப் பாம்பு அவனைப்பார்த்து சீற, தொங்கிக் கொண்டிருக்கின்ற அறுகின் வேரை எலி கடிக்க அறுகின் வேரைப் பிடித்த அம் மனிதனுக்கு இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியில் ஒரு துளி தேன் அவனது நாக்கில் வந்து விழுந்தது. அதை அவன் தனது நாவினால் நக்கினான் அதனைப் போன்றதே இவ்வுலக வாழ்க்கையும் இன்பமும் ஆகும்.

*'அடுகரி தொடர வீழ வைந்துதலை நாகங் காண*
*விடிகிணற்றறுகின் வேரைப் பற்றி நான்றிட வவ் வேரைக்*
*கடுகவோ ரெலியும் வந்து கறித்திட அதனில் நின்றோனுக்கு*
*கிடைத்துளித் தேனுகின்பம் போலு மிப் பிறவியின்பம்'*

(விவேகசிந்தாமணி : 109 )

இந்தப் பாடல் மூலம் மஹாபாரதக் கதையை வலியுறுத்துகின்றது. மனிதவாழ்கையின் இளமைக்காலத்தில் உள்ள ஒவ்வொரு நாளும் நீண்ட வாழ்நாள் உள்ளதென்று மனிதன் நினைத்தல் இயல்பு. "ஒரு கணப் பொழுதில் மனிதன் குழந்தையாகக் காட்சி தருகிறான். ஒரு கணப் பொழுதில் காமுறு இளைஞனாய்க் காட்சிதருகிறான் ஒரு கணப் பொழுதில் செல்வத்தில் புரளுகிறான். பின்னர் கிழத்தனத்தால் உடல் சுருங்கி யமலோகம் செல்கிறான். நாடகமே உலகம் மனித ரெல்லாம் நடிகராவார் என்ற கருத்து இப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

क्षणं बालो भूत्वा क्षणमपि युवा कामरसिकः

क्षणं वित्तै हीर्नः क्षणमपिच सम्पूर्णविभवः।

जराजीर्णैर्नट इव वलिमण्डिततनु

र्नरसंसारान्ते विशति यमधानीयवनिकाम्॥

(வைராக்கிய சதகம் - 54)

**தவவழி நிற்றல்.**

தவத்தின் வழி நின்று ஞானம் பெநற்றவஉகள் ஞானிகள் தவத்தின் பயன் நன்நிலையடைதல். ஞானம் பெற்றதன் பயன் உடற் பற்றின்றி இருத்தல். தவத்தின் வழி நின்று முழுமை பெற்ற ஞானிகள் உடல், உலகம், செல்வம் ஆகியவற்றின் தன்மைகளை அறிந்தவர்கள் ஆதலால் உலகப் பொருட்கள் மீதும் ஆசைதோன்றுவதற்கான புலன்கள் மீதும் அது செயற்படுத்தும் உடல் மீதும் பற்றின்றி இருப்பர். உடலை அவர்கள் ஒரு போதும் மதித்தில்லை. துறவியின் கூற்றாக வரும் பாடல் ஒன்று

*"பிச்சை அன்னமே உணவு*
*திசைகளே ஆடை*
*பூமி அன்னையின் மடியில்*
*ஆனந்த உறக்கம்*
*மன்னவஉகளிடம் ஆகவேண்டியது*
*என்ன இருக்கிறது"* (வைராக்கிய சதகம் 65)

என மனமகிழ்வு ஒன்றே துறவியை மன்னனாக்குவதாக கூறுகிறது. துறவறமே பெரிதாகும் துறவிக்கு வேந்தன் ஒரு துரும்பு தானே (தண்டலையார் சதகம் 35)

என்ற தண்டலையார் சதக பாடலும் இதே கருத்தைக் கூறுகிறது.

**பிற விடயங்கள்.**

நீதி நூல்கள் மேற்குறித்த விடயங்கள் தவிர அன்றாட வாழ்வில் கடைப்படிக்க வேண்டிய ஆசாரங்கள், உணவு வகைகள், நோய்கள், அவற்றிற்கான பரிகாரங்கள் என்பவற்றைக் கூறுகின்றது. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள்கள் சேர்ந்து உடலுக்கு நன்மை செய்வது போல திரிகடுகத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும் மூன்று நீதிகள் சேர்ந்து அறியாமையைப் போக்கி வாழ்வினை நன்னிலைப்படுத்தும் என்று கருதப்படுகின்றது. நீதி சார் அனுபவத்திரட்டு வாதம், பித்தம், கபம் இந்த மூன்றும் அளவோடு இருக்கவேண்டும் அவ்வாறு இருந்தால் உடல் சமநிலையில் காணப்படும் வாத உடம்பாக இருந்தால் உடல் பருத்தும் பித்த உடம்பாக இருந்தால் உடல் மெலிந்தும் கப உடம்பாயின் உடல் வற்றல் ஆகியும் காணப்படும். (நீதி சார் அனுபவத்திரட்டு : 112). மேலும் தாம்பூலம் உண்பதாலும் புகைப்பிடித்தலாலும் வரும் கேடுகளை,

*"தாம்பூலம் அதிகரித்தால் நாவிலே தடிப்புண்டாம்*
*உண்ட சுவை தெரியாது.*
*தாம்பூலச் சத்திற்கு நன்கு தந்தம்போம்*
*பசியினையும் போக்கும்*
*காம்பூறும் புகை மிகுந்தால்*
*நடையோட்டம் தனிலிரைக்கும்*
*கறுக்கும் முகவுதடு காம்பூறு புகை பித்தம்*
*கண்காலும் ஓய்வவ, மனனதழிவே".*

(நீதி சார் அனுபவத்திரட்டு : 117)

தாம்பூலம் புகைபிடித்தலால் வரும் கேடுகளை அது விளக்குகின்றது. குறள் குறைந்தளவு உண்பவனிடத்தே இன்பம் நிற்பதுபோல் மிகப்பெரிது உண்பவனிடத்து நோய்நிற்கும் என்பதை

*"இழிவறிந்து உண்பான்காண் இன்பம் போல் நிற்கும்*
*கழிபேர் இரையான் கண் நோய்"*

(குறள்: 946) என்ற குறள் பாவால் விளக்குகின்றது.

நீலகண்டதீட்சிதர் என்பவர் கலியுகத்தின் தன்மைபற்றி நகைச்சுவை ததும்ப கலிவிடம்பனம் என்ற நூலை இயற்றியுள்ளார். கலிகால பரிகாசம் என்னும் இந்நூல் சோதிடர், மருத்துவர், மாந்திரிகர் எனப்பலதிறப்பட்ட தொழிலாளர்களின் தொழில் யுக்தியை நகைச்சுவையுடன் கூறுகிறது. (ஒரு சோதிடன் தன்னிடம் கேள்வி கேட்கிறவனிடத்து ஒரு சமயம் கை கூடும் என்றும் யாவும் கைகூடும் என்றும் இப்போதாவது வரும் காலத்திலாவது கைகூடும் என்றும் இரண்டும் கலந்தும் கூறவேண்டும். (கலிவிடம்பனம் : 19)

இதேபோல கவிகள் ஒருவன் துதிசெய்வதையே துதிக்கின்றனர். ஒரு பொருளின் குணத்தை தாமாகக் கண்டு துதிப்பதில்லை. ஒரு வண்டு ,புழு விடயமாக கவிகள் எத்தனை கற்பனை செய்துள்ளார்கள். (கலிவிடம்பனம் :36) இவ்வாறு கலியுகத்தின் தன்மைகளை ஆசிரியர் பரிகாசம் செய்கின்றார்.

**தொகுப்புரை.**

- நீதி இலக்கியங்கள் தனி மனிதனையும் சமூகத்தையும் சுத்திகரிக்கும் பணியைச் செய்பவை. இதனால் இவை முக்கியத்துவம் வாய்ந்தவை.
- இவை உணர்த்தும் அறக்கருத்துக்கள் ஒரு நாட்டினர்க்கோ அன்றி ஒரு மொழியினர்க்கோ சொந்தமானவையல்ல மானிடம் முழுமைக்கும் சொந்தமானவை.
- சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் பல்வேறு நீதி இலக்கியங்கள் தோன்றியுள்ளன.
- சம்ஸ்கிருதத்தில் பர்த்திருஹரியின் நீதி சிருங்கார வைராக்கிய சதகங்கள் தமிழிலே திருக்குறளையொத்த பெருமை உடையவை.
- நீதி இலக்கியங்களைச் சுவைபடபக் கூறுவதற்கும் மக்கள் மனதில் பதியச் செய்வதற்கும் கவிஞர்கள் பல யுக்திகளைக் கையாண்டுள்ளனர்.

- இறைவன் வழி நிற்கும் மெய்யான ஒழுக்க நெறியே சமயம் எனப்படுவது என்பது நீதி நூலார் கருத்து.
- கர்மம் , விதி என்பன முன்செய்த வினைப்படி நிகழ்வன.
- மன்னன் குடிகளுக்கு எது திருப்பியளிக்குமோ அதையே செய்ய வேண்டுமென நீதி நூல்கள் கூறுகின்றன.
- புறவாசாரங்களை விட அகவாசாரங்களுக்கு நீதி இலக்கியங்கள் முதன்மையளிக்கின்றன.
- இல்லறமே நல்லறங்கள் செய்வதற்கு ஏற்ற களமாக விளங்குகின்றது. இல்லற வாழ்வு குடும்பத்தையும் பிறரையும் போற்றுவற்கு இடமாக இருக்கிறது.
- ஐம்புலன்களை ஒளித்து அவற்றின் வழி நில்லாமல் இறை நிலையில் நின்று ஞானம் பெறுவதால் வீடு பேறு பெறலாம்.
- எந்நிலையிலும் தாழாமல் உயர் பண்புடன் திகழும் ஞானிகளின் சிறப்பு உணர்த்தப்படுகின்றது.
- நோய்கள் அவை தீர்க்கும் முறைகள் கலியுக மாந்தரின் செயல்கள் போன்ற பல விடயங்களும் நீதி நூல்களில் உணர்த்தப்படுகின்றன.

**சம்ஸ்கிருத ஆதார நூல்கள்- (தமிழ்)**


- **ஆசாரக் கோவை,** (1899), நச்சினாஉக்கினியன் (உரை), ஸ்ரீகிருஷ்ணவிலாஸ் அச்சியந்திரசாலை, தஞ்சாவூர்.
- **உபநிஷத்சாரம்,** (1989), அண்ணா (உரை) பிரம்ம, கைவல்ய, ஜாபால, சுவேதாஸ்வதர, கர்ப்ப, நாராயண உபநிடதங்கள். ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.
- **ஐங்குநூறு ,** (2018) , புலியூர்க்கேசிகன் (உரை) சாரதா பதிப்பகம் , சென்னை.
- **கடோபநிஷத்,** (2016), மணி. க (தொகுப்பு) அபயம் வெளியீட் டாளர்,சென்னை.

- **கலிவிடம்பனம்,** சுமதி (தமிழ் மொழிபெயர்ப்பு), லிபேட்டி அச்சகம், சென்னை.
- **சாந்திபர்வன்,** (1999), திருமுருக கிருபானந்தவாரியார் உரை, குகவாரிதியார் பதிப்பகம் சென்னை.
- **சாணக்கிய நீதி,** வீரராகவன். ஆ, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்.
- **தைத்திரிய உபநிஷத்** (2002) சுவாமி ஆசுதோஷானந்தா, (விளக்கம்), ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
- **பஞ்சதந்திரம்,** (2012), விஷ்ணுசர்மா, கிருஷ்ணானந்த சர்மா (பதிப்பு) யாழ்ப்பாணம்.

**தமிழ் ஆதார நூல்கள்.**

- **தண்டலையார் சதகம்,** அரசு (உரை) , தென்னிந்திய நூற்பதிப்பு, திருநெல்வேலி.
- **திருக்குறள் ,** அடைக்கலசாமி எம். ஆர். (உரை) , காந்தளகம் , சென்னை.
- **நல்வழி ,** (2018), வேங்கடசாமி. ந .மு , (உரை) , தமிழ்நாடு.
- **நீதிசாரஅனுபவத்திரட்டு ,** (2000) , சௌந்தரபாண்டியன் (உரை), அரசினர் சுவடிகள் நூலகம் , சென்னை.
- **நீதி நூல்சாரம்,** (2016) நடராஜன். ஆர் , (ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன், மனுநீதி, விதுரநீதி, சுக்கிரநீதிகள்) அடங்கியது. கவிதாபப்பிளிக்கேஷன்ஸ், சென்னை.

**சம்ஸ்கிருத மூலநூல்கள் ஆங்கிலத்தில்.**

- **Bhartrihari's Neeti Satakam** , 1957; Swetaranyam Narayana Sastriar (Com.) Sri-Ram. Press,Madras.
- **Bhartrihari's Sringara Sataka and Vairagya Sataka,** (1954), Ramachandra Budendra (Com.) Vavilla Press, Madras.

- **Manusmriti** , (19570, Pranjiwan Harihar Pandya (Ed.) The Gujarati Printing Press, Bombay.
- **Santiparvan Part II** , (1961) , Shripad Krishna Belvakar Bhandarkar, Origental Research Institute.


**பிற நூல்கள்.**


- சந்திரசேகரம். ப, **கல்வித்தத்துவம்**, யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ்ப்பதிவு, யாழ்ப்பாணம்.
- சுப்பிரமணியன். அ.வெ, (2003), **வடமொழி இலக்கிய வழிகாட்டி**, கலாநிலையம், சென்னை.
- திருநாவுக்கரசு க. (1977). **திருக்குறள் நீதி இலக்கியம்**, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- நடராஜன். சோ. (1999), **வடமொழி இலக்கிய வரலாறு**, கலைஞன், பதிப்பகம், சென்னை.
- பசாம் ஏ. எல். (2005) **வியத்தகு இந்தியா**, கல்விவெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.


UNIVERSITY OF JAFFNA LIBRARY
P 14168



கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், [illegible]யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சிறிகலா ஜெகநாதன், [illegible]பக் கல்வியை கட்டுடை சைவவித்தியாசாலையிலும், உயர் கல்வி[illegible]ன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றவர். இராமநாதன் [illegible]ரியில் பலகால இடை வெளியின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட [illegible] பாடத்தினை க.பொ.த உயர்தரத்தில் ஒரு பாடமாகக் கொ[illegible], 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார். 1979 ஆம் ஆண்டி[illegible]கிருத விசேடதுறைக்கான கல்வி நெறி முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அ[illegible]ர்ப்பத்தில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் போன்றோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. சம்ஸ்கிருதத்தினை விசேட பாடமாகக் கொண்டு கற்றார். 1984 ஆம் ஆண்டு முதற் கொண்டு 1988 ஆம் ஆண்டு வரை கொழும்பு - **Presbyterian** மகளிர் கல்லூரியிலும், 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணி யாற்றினார். அக்காலப் பகுதியில் இராமநாதன் மகளிர் கல்லூரியில் மாணவர் வரவின்றி இடைநிறுத்தி வைக்கப்பட்ட சம்ஸ்கிருத பாடத்தினை மீண்டும் அக் கல்லூரியில் ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1989 - 1992 ஆண்டுகள் வரை வரவு விரிவுரையாளராக யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினர். 1992 ஆம் ஆண்டு நிரந்தர விரிவுரையாளராக அப்பல்கலைக்கழகத்தில் தெரிவு செய்யப்பட்டு இலக்கிய கலாநிதி வி. சிவசாமி அவர்களின் மேற்பார்வையில் முதுதத்துவமாணி ஆய்வினை மேற்கொண்டு 1999 ஆண்டு முதுதத்துவமாணி பட்டத்தைப் பெற்றார். (2000 - 2004, 2006 - 2015) ஆண்டுகள் வரையிலான காலப் பகுதிகளில் சம்ஸ்கிருதத் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும், சம்ஸ்கிருத இலக்கியச் சோலை என்னும் நூலினையும், க.பொ.த உயர்தர பரீட்சை மாணவர்க்கான வழிகாட்டி நூல்களையும் மாணவர் பயன் கருதி இவர் எழுதியுள்ளார்.

*Guru Printers, Thirunelvely. 021 222 8266*